# மாகாணக் கல்வித்திணைக்களம்
# வடக்கு மாகாணம்.
# இரண்டாந் தவணைப் பரீட்சை - 2017

| தரம் : 11 | தமிழ் இலக்கியநயம் | நேரம் : 2.00 மணி |
|---|---|---|
| | பெயர் / சுட்டெண் ............................................... | |

## பகுதி I

❖ பகுதி I இல் 1,2, 3 வினாக்களுக்கும் பகுதி II இல் எவையேனும் இரண்டு வினாக்களுக்கும் மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

**01. கீழ்வரும் வினாக்களுக்கு சுருக்கமான விடை தருக.**

01. 1) "சுனைப்பூக்குற்றுத் தொடலை தைஇப்"
இங்கு "தொடலை என்ற பதம் குறிப்பது யாது?

2) மேற்குறித்த பாடலைப் பாடிய புலவர் யார்? அவர் இயற்றிய சங்க இலக்கியம் ஒன்றினைத் தருக?

02. 1) "அறிந்தோம் அருகன் வழி தங்கள் அறமாகட்டும்"
1. இக்கூற்று இடம்பெற்ற சந்தர்ப்பத்தை விளக்குக.
2. "வஞ்சியர் காண்பம்" என்ற நாடகப் பிரதியின் மையக்கருத்து யாது?

03. 1) கென்னத் யசூதா - 'ஹைக்கூ' பற்றிக் கூறிய கருத்து யாது?
2) ஜப்பானிய கவிதை மரபு எவ்வகைப் பா வகைகளைத் தன்னுள் பொதித்து வைத்துள்ளது?

04. 1) "சிறுதொட்டி சுவர் நான்கும் கண்ணாடி" என்ற புதுக்கவிதையில்
1. கவிஞருக்கு மீன்தொட்டி எதுவாகத் தெரிகிறது
2. குறித்த கவிதையின் ஆசிரியர் யார்?

05. அன்ன காலையின் ஆண்தகை ஆளியும்
பொன்னின் நல்நகர் வீதியில் புக்கனன்"
1. இங்கு ஆண்தகை ஆளி எனக் குறிப்பிடப்படுபவன் யார்?
2. இவ்வடியில் காணப்படும் இலக்கியச்சிறப்பு யாது?

(5 x 4 = 20 புள்ளிகள்)

**02. கீழுள்ள கவிதையைப் படித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

1) ஈசன் வந்து சிலுயையில் மாண்டான்
எழுந்து யிர்த்தனன் நாள் ஒரு மூன்றில்
நேசமாமரியா மக்த லேற
நேரிலே இந்தச் செய்தியைக் கண்டாள்
தேசத்தீர் இதன் உட்பொருள் கேளீர்
தேவர் வந்து நமக்கு - புகுந்தே
நாசமின்றி நமை நித்தங் காப்பாக
நம் அகந்தையை நாம் கொன்று விட்டால்

The National e-learning Portal for The General Education

2) அன்புகாண் மரியா மக்தலேநா
    ஆவி காணுதிர் யேசு கிறிஸ்து
முன்பு தீமை வடிவினைக் கொன்றால்
    மூன்றுநாளினில் நல்லுயிர் தோன்றும்
பொன் பொலிந்த முகத்தினிற் கண்டே
    போற்றுவாள் அந்த நல்லுயிர் தன்னை
அன்பெனும் பரியா மக்தலே நா
    ஆஹாஷ சாலப் பெருங்கிளி யி∴தே.

1) யேசுநாதரின் உயிர்ப்பை பாரதியார் எவ்விதம் நோக்குகிறார்?
2) மரியா மதலேநா பற்றிய சித்திரிப்பை விளக்குக.
3) பாடல் வரிகள் மூலம் வெளிப்படும் யேசுநாதரின் பெருமைகள் எவை?
4) “நாசமின்றி நம்மை நித்தம் காப்பார்” என்ற அடி உணர்த்து கருத்து யாது?
5) “ஆஹா! சாலப் பெருங்கிளி” என சிறப்பிக்கப்படுபவர் யார்?

(5 x 5 = 25 புள்ளிகள்)

**03. கீழ்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

ஹைக்கூ என்பதன் அர்த்தம் என்ன? என்ற கேள்விக்கு சேம்பர்ஸ் அகாரதி 5, 7, 5 அசைகள் (s llables) கொண்ட ஜப்பானிய கவிதை என்று பதிலுரைக்கின்றது. எனினும் இந்த விளக்கத்தையும் தாண்டி ஹைக்கூ ஒரு அனுபவப்பகிர்வு வியப்பில் ஆழ்த்தும் வீச்சு. இரசனையூட்டும் அழகு. சிந்தனையெழுப்பும் அலை, உணர்ச்சியை ஏற்றும் தூண்டியாக அமையும். ஆற்றல் மிக்க வடிவம். ஒரு மின்னல் அல்லது மின்மினி எனலாம்.

அனுபவத்தையும் உணர்வையும் பிறருக்குத் தர முயல்வது தான் ஹைக்கூ. உண்மையில் கலை, இலக்கியம் அனைத்தினதும் நோக்கம் இதுதான். கவிஞனோ, கலைஞனோ, ஓவியனோ தனக்குக் கிடைக்கும் அனுபவத்தை அப்படியே உணர்வு இழை அறுந்திடாதவாறு தன் சிருடியைப் பின்னி வாசகருக்கு பரிசளிக்கின்றான். வாசகர்கள் தமது அனுபவ வெளியுடன் இணைத்து ரசித்து இன்புறுகிறார்கள். அல்லது துயருருகிறார்கள். ஒரு காலைப்பொழுதின் மகிழ்வை அல்லது துயரைப் பகிர்கிறது ஹைக்கூ.

கணப்பொழுதின் அனுபவமாக இருப்பினும் அது கிளர்த்தும் சிந்தனைகளும், சம்பாசனைகளும் எதிர்விளைவுகளும், கேள்விகளும் அதிகம் வாசக மனசுக்குள் அலை எழுப்பும். அதனால்தான் ஹைக்கூ காந்தம் போல் இருக்கும் மொழிநடையும் பிரபஞ்சத்தின் அந்தரங்களைக் காட்சிப்படுத்தும் தத்துவப் பார்வையும் கொண்டுள்ளது எனலாம்.

1) ஹைக்கூ என்ற கவிதை வடிவம் பற்றிய கட்டுரை ஆசிரியரின் கருத்து யாது?
2) கலை, இலக்கியம் என்பவற்றின் நோக்கு எவ்வாறு அமைந்துள்ளது?
3) “ஹைக்கூ” ஆற்றல்மிக்க கவிதை வடிவம் என்பதற்கான காரணம் யாது?
4) ‘ஹைக்கூ’ கவிதை வாசகர்கள் தொடர்பாக கட்டுரையாளரின் மனப்பதிவு
5) “காந்தம் போல் இழுக்கும் மொழிநடை” என்ற வரிகளின் காணப்படும் இலக்கியச்சிறப்பு யாது?

(5 x 5 = 25 புள்ளிகள்)

**04. வஞ்சியர் காண்டம் என்ற பாடப் பரப்பை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

1) மாதவி பற்றிய கண்ணகியின் மனப்பதிவுகள்
2) நாங்கள் உரிமை மக்கள் எனக் காவற்பெண்டு கூறக் காரணம்

(15 புள்ளிகள்)

05. "தீவு மனிதன்" என்ற சிறுகதையை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1) கதை சொல்லியின் தனிமை காட்டப்படும் விதம்
2) கதைக்கும் தலைப்பிற்குமான பொருத்தப்பாடு (15 புள்ளிகள்)

06. "புதுமைப் பெண்ணாய் மாறிடுவோம்" என்ற கவிதையை அடிப்படையாகக் கொண்டு

1) மலையகப் பெண்களின் வாழ்வியல் அவலம் காட்டப்படும் விதம்
2) மலையகப் பெண்களிடம் எழுச்சி பெறும் விடுதலை வேட்கை (15 புள்ளிகள்)

07. கிட்கிந்தைப் படலத்தை அடிப்படையாகக் கொண்டு

1) இலக்குமணன் கிட்கிந்தை நகரினுள் புகுந்த விதம்
2) அனுமான் கூறிய ஆலோசனையைத் தாரை எவ்வாறு செய்தாள்? (15 புள்ளிகள்)

The National e-learning Portal for The General Education

## விடைகள்

**01.**

01. 1) தொடலை - மாலை
2) கபிலர் - குறிஞ்சிப்பாட்டு

02. 1) சந்தர்ப்பம்
யாரால் - துறவிகளால்
யாருக்கு - காவற்பெண்களுக்கு
சந்தர்ப்பம் - உங்களுக்கு விருந்தோம்பும் பாக்கியத்தை இழந்து நிற்கும் எங்களுக்கு தயை கூர்ந்து அருள் புரிய வேண்டும் எனக் கேட்ட வேளையில்

2) சிலப்பதிகாரத்தை மறுவாசிப்புச் செய்வதன் ஊடாக அன்றைய பெண் சமூகத்தின் யதார்த்த நிலையினை மெய்ப்பிக்கின்றதாக அமைகின்றது எனலாம்.

03. 1) "தூய்மையான கவிதையின் அடர்த்தியான சாறு பிழிவு"
2) தன்கா, சோக்கா, ரெங்கா, பாங்கா, சென்றியு, ஹைபுன், ஹொக்கு, ஹைக்கூ

04. 1) சொகுசுச் சிறையாக
2) திருமாவளவன்
இயற்பெயர் (கனகசிங்கம், கருணாகரன்)

05. 1) இலக்குமணன்
2) உவமை அணி
உவமானம் - சிங்கம்
உவமேயம் - இலக்குமணன்
பொதுத்தன்மை - வீரப்பொலிவு

**02.** 1) யேசுநாதர் எம்மை காப்பாற்றுவார் எமது உள்ளத்துள் புகுந்து பாவங்களைப் போக்குவார். துன்பம் நம்மை அனுகாது நித்தம் காப்பார். நமது பாவங்களைப் போக்க சிலுவையில் மரித்தார். நமது அகந்தையை நாம் அழித்தால் அவர் வந்து எமக்குள் புகுவார்.

2) யேசுவின் உயிர்ப்பை முதலில் கண்டவர் யேசுவின் பொலிந்த முகத்தைக் கண்டு வணங்கியவர்.
இவன் போற்றும் அறங்கள் யேசுநாதரின் உண்மையை கொண்டவை.
யேசுநாதரிடம் மிக்க அன்பு கொண்டவர்.

3) நமது பாவங்களை நீக்க சிலுவையில் மரித்தாக மூன்றாம் நாள் உயிர்ப்பும் பெற்றார்.
4) எவ்வித துன்பமும் இன்றி நம்மைக் காப்பார்.
5) யேசுநாதர்

2) தீவு நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்ட நிலப்பரப்பு அதுபோல் உறவுகளும் பிடிமானம் அற்றநிலையில் தனிமையாக வாழ்தல்.
அரசியல், பொருளாதார சமூகக் கூறுகள்
தனிமனிதனை அடைய வைக்கிறது
அழுவதைத் தவிர வேறு எதனையும் செய்ய முடியாத நிலை
உறவுகள் நெருக்கமின்றி வாழும் தன்மை

The National e-learning Portal for The General Education

03. 1) அனுபவத்தையும் உணர்வையும் தரமுயல்வது ஹைக்கூ
கணப்பொழுது அனுபவத்தின் விளைவு ஹைக்கூ
உணர்ச்சியை எழுப்பும் தூண்டி
இரசனை ஊட்டும் கவி வடிவம்

2) தாம் அனுபவித்த அனுபவத்தையும் உணர்வையும் பிறருக்கும் அளிக்கவல்லது.
3) கவிதை கிளப்பும் சிந்தனைகளும், சம்பாசனைகளையும், எதிர்விளைவுகளும் கேள்விகளும் வாசக மனசுக்குள் கலை எழுப்புபவை.
காந்தம் போன்ற மொழிநடை
4) ஹைக்கூ கவிதை வாசக மனதுக்குள் புதிய கலையை தோற்றுவிப்பதாக உள்ளது.
5) உவமையணி காணப்படல்
உவமானம் - காந்தம்
உவமேயம் - மொழிநடை
பொதுத்தன்மை - கவருதல்

04. 1) ஐயை மாதவி பற்றிக் கேட்ட கேள்விகளுக்கு கண்ணகி திறம்பட விடையளிக்கிறார்.
மாதவியை கடிந்து கூறாது. உயர்வாக மதித்தாள்.
மாதாவியிடம் உள்ள திறன்கள் பலவும் என்னிடம் இல்லை எனக் கூறுகிறாள்.
மாதவியென்னும் நல்லாளை நான் அன்றுதான் முழுமையாக அறிந்தேன்
மாதவி போல் கவிபுனையக் கற்றவள் அல்ல நான்.
மாதவி தான் செய்த குற்றம் யாது என துணிவாகக் கேட்டு மடல் எழுதினாள்.
கணிகையர் குலத்தில் பிறந்தாலும் மாதவர் செய்த கவுந்தி அடிகள் போல் மெத்தப் படித்தவள்.

2) நாக நாட்டைச் சேர்ந்த நாங்கள் பாண்டிய நாட்டுக் கிராமத்துக்கு விற்கப்பட்டோம். இவர்களே எம் மூதாதையர்
பயண வழியில் சிறைப்பிடிக்கப்பட்டோம்.
புகார் நகருக்கு அடிமைகளாக விற்கப்பட்டோம்.
உமது பாட்டன் மாறாய்கனுக்கு திருமணம் பரிசாக எம்மை அளித்தனர்.
அன்றிலிருந்து நான் உங்களது உரிமை மக்கள்

05. 1) தீவு நான்கு பக்கமும் சுவர்களால் சூழப்பட்டது. என்னுடன் இருந்தவை புத்தக அலுமாரி, ஒரு கசற் றெக்கோட், ஒரு செற்றி, ஒரு யன்னல்
2) எனக்கு வானம் பிடிக்கும். நீலம் பிடிக்கும், மேகம் பிடிக்கும்.
எனது தீவில் மட்டும் நான் சுதந்திரமாக அழுவேன். என்னோடு உறவு கொண்டோரும் தேவையான போது அறுத்துக் கொள்வார்கள். ஏமாற்ற பலர் தயாராக இருக்கிறார்கள்.

06. 1) குளிர் காயும் முன் வேலைக்கு செல்லல் சங்கு ஊது முன்னர் தளிரினை நின்றறிதல் குளிரின் மத்தியிலும் மன வேதனையின் மத்தியிலும் தொழில் செய்தல்

2) அடிமைத்தனையினை தூக்கி எறிய துணிவு கொள்வோம்.
எம்மை மூடிய பேரிருள் ஒட்டிடுவோம்
குன்று போன்ற மனஉறுதி கொண்டு போரிட முன்வருவோம்.
அடிமைக்கு எதிராக எண்ணற்கரிய கலை படைப்போம்.
பெண் விடுதலைக் கீதம் இசைத்திடுவோம்.
பொய்மைத் திரையை கிழித்தெறிவோம்
பாவையர் வாழ்வில் உயர்ந்திடுவோம்.

07. *1)* “அன்ன காலையின் ஆண்தகை ஆளியும்........”

*2)* ஆண்களில் சிறந்தவனும் சிங்கம் போன்றவனுமாகிய இலக்குமணன் நகரினுள் புகுதல்
பெண்ணின் நல்நகர் வீதியில் புக்கன.....

*3)* தாரையை சுற்றி நின்றவர் என்ன செய்வது என்று திகைத்து நிற்கும்படி இலக்குமணன் சென்றான்.

*2)* “நீரெலாம் அயல் நீங்குமின்......
என்னைச் சுற்றி உள்ள நீங்கள் அளவை...........
அப்பால் செல்லுங்கள் எனக் கூறுதல்
நான் இலக்குமணனிடம் சென்று அவன் உள்ளக் கருத்தை கேட்டு அறிவேன்
வானரங்கள் விலகி நிற்றல்
தாரை அனுமான் கூறியபடி நீண்ட கூந்தலை உடைய தோழிப் பெண்களுடன் இலக்குமணனை எதிர்கொள்ளல்.

The National e-learning Portal for The General Education